[1970 ஆகஸ்ட் 29

* 128 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள சுந்தரப்பட்டியை ஒட்டியிருக்கும் கூடலூர் ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கும் பழைய அணையைச் சீர்படுத்திக் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: புதுக்கோட்டை பகுதியில் சுந்தரப்பட்டியை ஒட்டியிருக்கும் கூடலூர் ஆற்றின் குறுக்கே இருக்கும் பழைய அணை பயன் இல்லாமல் இருக்கிறது. இரு பக்கத்திலும் மூடு வாயில்கள் அமைத்து சீர்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வெள்ளாற்றின் குறுக்கே சுந்தரம்பட்டி அணைக்கட்டு கட்ட ரூ. 2.05 லட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இருக்கிறது. இதைக் கட்டுவதனால் இரண்டு குளங்கள், கும்மக்குடிபட்டியும், சேந்த மங்கலம் குளமும் பயன்படும். இந்த இரண்டு குளங்களையும் எடுத்துக்கொள்ள சுப்ரீம்கோர்ட்டில் ஒரு தள்ளிவைப்பு ஆணை இருக்கிறது. அந்த ஆணை காரணமாக மேற்கொண்டு வேலை செய்ய முடியவில்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அந்த 'ஸ்டே' ஆர்டரை ரத்து செய்யவேண்டும். பிறகுதான் நடவடிக்கை எடுக்கப் படும்.

* 129 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதியில் நல்லாற்றின் குறுக்கே (1) மண்ணரை கிராமத்தில் கஞ்சம்பாளையத்திற்கு அருகிலும், (2) தொட்டியபாளையம் கிராமத்திலும் அணைகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இத்திட்டம் தலைமைப் பாசனப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு பின் கைவிடப்பட்டது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியர் பரிசீலனை செய்து அங்கே அணை கட்ட ஏற்ற இடம் என்று தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். குடி தண்ணீருக்கு மிகுந்த கஷ்டம் இருப்பதால் உடனடியாக அணை கட்ட அரசாங்கம் இனியாவது பரிசீலனை செய்து ஆவன செய்யுமா?

1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நல்லாற்றின் குறுக்கே கஞ்சம்பாளையத்திலும், தொட்டிப்பாளையத்திலும் குட்டைகள் கட்டும் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டன. இந்த ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டப்படுமானல் இவ்வாற்றின் நீர்ப் பாசனத்தின் கீழ் பகுதியில் உள்ள நிலங்கள் பாதிக்கப்படும் என்ப தாலும், மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதல் தராததாலும், தலைமை பாசனப் பொறியாளர் ஒப்புக்கொள்ளாததாலும், இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வாரணசிபாளையத்தில் குட்டை அமைப்பு

* 130 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி காளிபாளையம் கிராமம் வாரணசி பாளையத்தில் ஓர் குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்? எப்போது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) காளிபாளையம் கிராமம், வாரணசிபாளையத்தில் ரூபாய் 1.67 லட்சத்தில் குட்டை அமைக்கும் திட்டத்தின் மதிப்பீடு தலைமைப் பொறியாளரின் பரிசிலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்ததும் அரசின் அங்கீகாரத்துடன் வேலை ஆரம்பிக்கப்படும். வேலை ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஆறு மாத காலத்தில் முடிவடையும்.

Nehru's speeches.

*131 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have authorised the local bodies to incur expenditure for the inscription of Nehru's speeches in stones; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ஜவஹர்லால் நேருவின் உரைகளிலிருந்தும், நூல்களி லிருந்தும் 12 மேற்கோள்களை மக்களின் பார்வைக்குக் காட்டி வைப்பதற்கு ஏற்றவையென அரசு தெரிந்தெடுத்து, கற்பாளங்கள், கான்கிரீட் பாளங்கள், உலோகப் பலகைகள் முதலியவற்றில் அந்த மேற்கோள்களைத் தக்கவாறு பொறித்து வைக்க, உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசால் அனுப்பப்பட்ட மேற்கோள்கள் பட்டியலிலிருந்து இந்த மேற் கோள்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தத்தம் நிதியிலிருந்து முறையே ரூ. 100, ரூ. 500-க்கு மேற்படாத செலவை மேற்கொள்ள ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.